**இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி-யொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவகம் செயற்பட்டுள்ளதாக,
- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்கீட்டு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறிப்பிட்ட நியமத்தின் தொடர்புகளுடன் இணங்காமை. | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் 41 ஆம் பிரிவின் பிரகாரம் பட்டப்பின் படிப்பு கற்கைப் பிரிவின் மற்றும் மொழிப் | எதிர் காலத்தில் கணக்கீட்டு மதிப்பீடு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவின் பெற வேண்டிய மீதிகளுக்காக ரூபா 13,378,660 ஆன அறவிட முடியாக் கடன் பெறுமதி நடப்பாண்டின் இலாபத்திற்கு எதிராகப் பதிவளிக்கப்படுவதற்கு கடந்த வருடத்தின் சீராக்கம் ஒன்றாக திரண்ட மிகையில் பதிவளிக்கப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் மிகை மேற்படி பெறுமதியால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | | வேண்டும். |
| (ஆ) | முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த ஆனால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற கிரயம் ரூபா 210,069,771 ஆன நிலையான சொத்துக்களுக்கு பயனுள்ள ஆயுட்காலம் பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் மீண்டும் மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இதுவரையில் அந் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மதிப்பீட்டு நடவடிக்கைகள் முடிக்கப்பட்டதன் பின்னர் நிலையான சொத்துக்களின் பெறுமதி நாளது வரையாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒவ்வொரு கடன்பட்டோர் தொடர்பான விவரமான மதிப்பீடொன்று செய்யப்பட்டு ஒதுக்கப்பட வேண்டிய ஐயக் கடன் பெறுமதியைத் தீர்மானிப்பதற்குப் பதிலாக கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ள பட்டப்பின்படிப்பு கற்கைப் பிரிவின் பெற வேண்டிய ரூபா 19,145,750 ஆன கடன் மீதிக்காக அடிப்படையொன்று இல்லாது அம் மீதியில் 10 சதவீதம் அதாவது ரூபா 1,914,576 ஆனது ஐயக் கடன் ஒதுக்கம் செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் மொத்தப் பெற வேண்டிய தொகையின் பிரகாரம் ஐயக் கடன் ஒதுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்பட்டோர் மீதிகள் தொடர்பான விவரமான மதிப்பீடொன்று செய்யப்பட்டு ஐயக் கடன் பெறுமதி தீர்மானிக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சிடமிருந்து பெற வேண்டிய 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 7,610,160 ஆன மிகுதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான மிகுதியொன்று செலுத்துவதற்கு உள்ளபடியாக அமைச்சின் அறிக்கைகளில் சான்றுப்படுத்தப்படாதிருந்தும் அது தொடர்பாக தேடிப்பார்த்து நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ரூபா 7,610,160 ஆன தொகையில் ரூபா 4,406,773 ஆனது பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அம் மீதிகள் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டு பதிவளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் ரூபா 2,142,100 ஆனது பொது நிர்வாக அமைச்சிடமிருந்து பெற வேண்டிய தொகையொன்று என்பதுடன் அத் தொகை நிறுவகத்தினால் பொது நிர்வாக அமைச்சிற்கு செலுத்த வேண்டிய தொகையில் தீர்க்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | பெற வேண்டிய மீதி தீர்க்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை கணக்காளர் சேவையின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக பெறப்பட்டிருந்த ரூபா 2,094,163 ஆன நிதி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்காக அல்லது செலுத்தி முடிக்கப்படாது 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டிய மிகுதிகளாக காட்டப்பட்டிருந்தது. | ரூபா 2,094,163.00 ஆன தொகை இலங்கை கணக்காளர் சேவையின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக நிதி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட தொகையில் செலவுகள் கழிக்கப்பட்டதன் பின்னர் மிகுதியான தொகையொன்றாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள | செலுத்த வேண்டிய மிகுதிகள் தீர்க்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | துடன் அத் தொகை முடிந்தளவு விரைவில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | |
| (ஆ) 01 வருடம் தொடக்கம் 05 வருடங்கள் வரையான செலுத்த வேண்டிய மீதி ரூபா 53,372,862 ஆகும். அம் மீதி தீர்க்கப்படுவதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ ஆன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முடிந்தளவு விரைவில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | செலுத்த வேண்டிய மிகுதிகள் தீர்க்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

---

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 10(05) ஆம் பிரிவு | ஒதுக்கீட்டிற்கு பின்னர் மிகுதியான தேறிய வருமானம் மீண்டும் ஒன்றிணைந்த நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் நிறுவகம் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வருடாந்தம் திறைசேரியில் செயற்பாட்டு மற்றும் அபிவிருத்திச் செலவுகளுக்காகத் தேவையான தொகையின் பகுதியொன்று வழங்கப்படுவதுடன் நிறுவனத்தின் வருமானம் கணக்கிடப்பட்ட பின்னர் ஏதாயினும் மிகுதி காணப்பட்டால் அத்தொகை மேற்கொண்ட செயற்பாட்டு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிறுவகத்தால் பிடித்து வைக்கப்பட்டு குறுங்கால மூலாதாரங்களில் முதலீடு செய்யப்படுகின்றது. | நிதிச் சட்டத்தின் பிரகாரம் தேறிய வருமானம் ஒன்றிணைந்த நிதியத்திற்கு அனுப்பப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1982 இன் 9 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகச் சட்டத்தின் 31 ஆம் பிரிவு | எவ்வித சட்டமொன்றும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படும் வரை செயற்படுத்தப்படலாகாது என்ற போதிலும் பட்டப்பின்படிப்பு கற்கைப் பிரிவின் இடைக்கால சட்டக் கோவைக்கான (By Laws) உரிய அங்கீகாரம் பெறப்படாது பட்டபின்படிப்பு பிரிவின் வழிகாட்டியொன்றாக அது பயன்படுத்தப்பட்டிருந்தது. | பட்டபின் படிப்பு கற்கைப் பிரிவின் இடைக்கால சட்டக்கோவை (by Layws) நிகழ் காலத்திற்கு பொருந்தும் வகையில் திருத்தப்பட்டு முறையான அங்கீகாரம் பெறப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | முறையான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் இலக்கம் 571 | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட பிடித்து வைக்கப்பட்ட வைப்புக்கள் ரூபா 520,015 ஆன தொகை வருமானத்திற்கு செலவு வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2022.04.30 இல் ரூபா 123,505.00 ஆன தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. திருப்பிச் செலுத்துவதற்கான கோரிக்கைகள் எதுவும் இல்லாதவிடத்து , ஏனைய வைப்பாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்ட பின்னர் 2022 ஆம் வருடத்தில் அத்தொகை வருமானத்திற்கு செலவு வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | 2013 ஆம் வருடத்திற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 157,380,495 பெறுமதியான சொத்துக்களுக்கான விரிவான தகவல்களை உள்ளீடு செய்வதன் மூலம் நிலையான சொத்துப் பதிவேடொன்று நாளது வரையாக்கப்பட்டு பராமரிக்கப்படவில்லை. | சொத்துக்களை அகற்றும்போது அந்தந்த சொத்துக் கணக்குகளில் செலவு வைக்கப்பட்டள்ள தொகையை சரிபார்த்து கணக்குகளை மீண்டும் சீராக்குவதற்கும் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளில் திருத்தப்பட முடியுமான பெறுமமதிகளை திருத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2015 யூன் 17 ஆந் திகதிய PED 03/2015 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான கொடுப்பனவுகளுக்கு | இக் குழு நிறுவப்படுவதற்கான உரிய ஆய்வுகள் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.8 ஆம் பிரிவு | மேலதிகமான கொடுப்பனவுகளுக்காக நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியுள்ள போதிலும் அவ்வாறான அங்கீகாரமின்றி கட்டுப்பாட்டுச் சபை செயலாளர் பதவியில் கடமையை மேற்கொள்ளும் பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒரு கூட்டத்திற்காக ரூபா 3,000 வீதம் 08 சந்தர்ப்பங்களில் பங்குபற்றல் படியொன்று மற்றும் கல்வி அலுவல்கள் சபையின் (AAB) மற்றும் செயற்திட்ட கல்வி (PTS) குழு உறுப்பினர் ஏழு பேருக்கு 12 சந்தர்ப்பங்களில் ரூபா 6,000 வீதம் பங்குபற்றல் படியொன்றாக மொத்தம் ரூபா 440,5000 செலுத்தப்பட்டிருந்தது. | தற்போது வரைவுபடுத்தப்பட்டு வருவதுடன் இடைக்கால சட்டக்கோவைக்கான (by Laws) அங்கீகாரம் பெறப்படும் சந்தர்ப்பத்திலேயே பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய PED 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.6 ஆம் பிரிவு | கட்டுப்பாட்டுச் சபை செயலாளர் பதவிக்குரியவர் தகைமையுள்ள பட்டயச் செயலாளராக இருக்க வேண்டிய போதிலும் நிறுவகத்தின் கட்டுப்பாட்டுச் சபை செயலாளராக தொழிற்படுகின்ற அதிகாரியினால் அத் தகைமை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்ட அதிகாரி பதவியொன்று உருவாக்கப்பட்டு இக் கட்டுப்பாட்டுச் சபை செயலாளர் பதவிக்கான செயற்பாடுகள் அப் பதவிக்கு உள்ளடக்கப்படுவதற்கு அவ்வப்போது கலந்துரையாடப்பட்டிருந்தும் அதன் செயற்படுத்தல் இது வரையில் முடிவடையவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் தகைமையுள்ள ஒருவர் நிறுவகத்தின் கட்டுப்பாட்டுச் சபை செயலாளர் பதவிக்கு நியமிக்கப்படல் வேண்டும். |
| (எ) | வெளியார் மதியுரை சேவைகளுக்கான சட்ட விதிக் கோவை. | (i) பந்தி இலக்கம் 07 இன் பிரகாரம் கூட்டுத்தாபனம் அல்லது சட்டரீதியான நிறுவனங்கள் உட்பட்ட அரச நிறுவனங்களில் கட்டணம் அறவிடப்படுகின்ற | 2008 பெப்ரவரி 11 ஆந் திகதி கூட்டப்பட்ட கட்டுப்பாட்டுச் சபை அறிக்கையில் 1 – 2008 (14) இன் பிரகாரம் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் | வெளியார் மதியுரை சேவைகளுக்கான சட்ட விதிக் கோவை. ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| மதியுரைச் சேவைகள் மேற்கொள்ளப்பட முடியாத போதிலும் கட்டுப்பாட்டுச் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டில் 12 நிறுவனங்களிட மிருந்து ரூபா 222,975 அறவிடப்பட்டிருந்தது. | பிரகாரம் அரச நிறுவனங்களுக்கு விரிவுரைகளை நடாத்த முடியுமென்பது குறிப்பிடப்பட்டிருந்தது | எடுக்கப்பட வேண்டும். |
| (ii) மதிப்பீடு தயாரிப்ப தற்கான நடைமுறையின் F தொகுதியின் பிரகாரம் உதவிப் பணிப்பாளர் கொடுப்பனவு நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத உத்தியோகத்தர்களுக்கு முறையே 3 சதவீதம் மற்றும் 7 சதவீதமாக செலுத்தப்பட வேண்டிய போதிலும் பரீட்சைகள் நடாத்தியமைக்காக உதவிப் பணியாளர் கொடுப்பனவுகள் நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத உத்தியோகத்தர்களுக்கு முறையே 3.8 சதவீதம் மற்றும் 6.2 சதவீதமாக செலுத்தப்பட்டிருந்தது. | பணியாளர் கொடுப்பனவு சதவீதங்கள் திருத்தப்படுவதற்காக பொருத்தமான முன்மொழிவொன்று தயாரிப்பதற்கு புதிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் எதிர்காத்தில் இந்த வீதம் திருத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | வெளியார் மதியுரை சேவைகளுக்கான சட்ட விதிக் கோவை. ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 28,872,819 மிகையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய வருடத்தின் மிகை ரூபா 17,301,487 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 11,571,332 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மொத்தச் செலவுகள் ரூபா 11,262,078 ஆல் அதிகரித்த போதிலும் , மொத்த வருமானம் ரூபா 22,833,410 ஆல் அதிகரித்தமை இம்முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2013 பெப்ரவரி 07 ஆந் திகதிய 13/0150/523/005 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நிறுவனம் நிறுவப்பட்டிருந்த சட்டம் திருத்தியமைப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் , அந்த அங்கீகாரம வழங்கப்பட்டு 09 வருடங்கள் கடந்த போதிலும் அது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய தேவையின் பிரகாரம் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தற்போது கவனத்தில் எடுக்கப்பட்டு வருகின்றது. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் சட்டம் திருத்தப்பட வேண்டும். |

### 3.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2013 ஏப்ரல் 19 ஆந் திகதிய அமப/13/0237/523/001 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின்படி இரண்டாம் நிலைக் கல்விசார் ஊழியர்களுக்கு நூற்றுக்கு 50 வீதமான இரண்டாம் நிலைக் கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்தது. அக் கொடுப்பனவு செலுத்துவதற்காக 2014 நவம்பர் 14 ஆந் திகதிய பொது முயற்சிகள் குழுவில் மாதாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய குறைந்த பட்ச விரிவுரைகள் மணித்தியாலங்களின் எண்ணிக்கை 45 மணித்தியாலங்களாக இருக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் 2015 யூலை மாதத்திலிருந்து 2021 சனவரி 31 வரையில் அவ்வாறு குறைந்தபட்ச விரிவுரை மணித்தியால எண்ணிக்கையை பூர்த்தி செய்யாத விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,785,350 அறவிடப்படப்பட்டிருக்கவில்லை. | பொது முயற்சிகள் குழுவின் அறிவுறுத்தல் பிரகாரம் இதுவரை அறவிடப்பட வேண்டிய தொகை அறவிடப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொது முயற்சிகள் குழுவின் அறிவுறுத்தல் செயற்படுத்தப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பட்டப்பின்படிப்பு கற்கைநெறிககான பதவியணிக் கொடுப்பனவுகள் திட்டமிடல் மற்றும் ஒப்படைத்தல் குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இவ்வாறாக திட்டமிடல் மற்றும் ஒப்படைத்தல் குழுவொன்றின் மூலம் கொடுப்பனவு அங்கீகரிக்கப்படுதல் தொடர்பாக திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட "வெளியார் சேவைகளுக்கான சட்டக் கோவையில் (Rules relating to external Services) உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வெளியார் சேவைகளுக்கான சட்டக் கோவை நிகழ் காலத்திற்கு பொருந்தும் வகையில் திருத்தப்பட்டு முறையான அங்கீகாரம் பெறப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | தேவையான அங்கீகாரம் பெறப்படு வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 நிதியத்தின் குறைப்பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் பயன்படுத்தப்படாத ரூபா 36,088,916 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நிறுவகத்தின் மூலதனச் செலவுகளுக்காக பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.. | நிதி பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |